# பணிநிறைவு வாழ்த்து!



திருமிகு **சி. இராஜேந்திரன், இ.ஆ.ப.**
அவர்களுக்கு
துணைத்தலைவர், தீர்வு ஆணையம்,
சென்னை மண்டலம், சென்னை –600 001

கவினூறும் தமிழ்ப் போலே குன்றாத இளமுறுவல்,
புவிமேவும் வள்ளுவத்தில், கன்றாகும் இளங்குருத்து!
கவிச்சுவையோ, நல்வழி முறையே! வள்ளுவமே!
புவிமேவி வாழ்ந்திடத்தான் வள்ளுவனும் வழிசொன்னான்!

இவைதான் வழியென்றே பாமரரும் அறிந்திடவே,
அவைசெய்தத் தனிமகனாய், ஆக்கினார் நல்லுரையே!
கவிக்கூட்டம் புகழ்செய்யும், பரிமேலழகர் உரை கொண்டு!
சுவைமிக்கச் செந்தமிழைச் சுவைத்திடலாம் நாமங்கு!

வள்ளுவன் புகழ்பாடப் பிறந்தார் என்றேயோர்;
வாசுகியாய் வந்தமைந்தார் இல்லாள் மலர்க்கொடியார்!
வரையான வாழ்வியலில் வளமாக்க இருமக்கள்!
வான்புகழும் பெயர்கொள்ளும், கார்த்திக், கிருத்திகா!

அஞ்சல் துறைதனிலே ஆரம்பப் பணிகொண்டார்!
துஞ்சாமல் முயற்சித்துக் குடிமைப் பணியமர்ந்தார்!
நெஞ்சுயர்த்தி நாங்கள் கொண்டாடச் சுங்கத்துறை!
விஞ்சுவதாய் அயல்நாட்டில் பணியும் கொண்டார்!

அங்கேதான் வள்ளுவமாய் உலகைக் கண்டார்!
தங்கடமை இதுவுமென்றே வள்ளுவத்தைத் தொடர்ந்தார்!
சுங்கத்துறைப் பணியதுவோ சுமையான நிலையாகும்!
தங்கமாய் இரண்டையுமேத் தாங்கிப் பிடித்திட்டார்!

எங்கள் மனங்களிலே நீங்காத இடமும் கொண்டார்!
சிங்கமென உயர்பதவி தானிருந்தும் நல்லன்புசெய்வார்!
தங்கத் தமிழ் போலே தரணிபுகழ் வள்ளுவமாய், எந்நாளும்
எங்கள் சி.ரா. வாழ்ந்திருக்க வல்லவன் அருள்வானே!

அன்புடன்,
**கு.ப. அசோகன்,**
சுங்க இல்லம், சென்னை-1

நாள்: 11-12-2019